### ரூ.727 கோடி மதிப்பில் 1703 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து 56 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார் !

# நீலகிரி மாவட்டத்தில் 15,634 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

உதகை, ஏப்.8-

**நீலகிரி மாவட்ட அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் (5.4.2025) கோயம் புத்தூர் சென்றடைந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கோயம்புத்தூரிலிருந்து சாலை மார்க்கமாக உதகை செல்லும் வழியில், வழிநெடுகிலும் மாணவ, மாணவியர்கள், பெண்கள் மற்றும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்போது, முதலமைச்சர் அவர்கள் நீலகிரி மாவட்ட பழங் குடியின மக்கள், சிறுவர், சிறுமியர் களிடம் உரையாடினார்.**

அதனைத் தொடர்ந்து, குஞ்சப் பனையில் கடந்த மழையின்போது நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட பகுதி களில் சரிவு தளம் திடப்படுத்தும் பணி களையும் மற்றும் கேபியான் சுவர் (GABION WALL) அமைக்கும் பணிக ளையும் முதலமைச்சர் அவர்கள் பார் வையிட்டு, ஆய்வு செய்தார். பின்னர், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அரசு உயர் அலுவர்களுடன் நீலகிரி மாவட்டத்தில் மேற்கொள்ளப் பட்டு வரும் வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக நேற்று (6.4.2025) தமிழ்நாடு முதலமைச் சர் அவர்கள், நீலகிரி மாவட்டம், உத கமண்டலத்தில் 143.69 கோடி ரூபாய் செலவில் 700 படுக்கை வசதிகளு டன் கட்டப்பட்டுள்ள நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையை திறந்து வைத்தார்.

பின்னர், தமிழ்நாடு முதலமைச் சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.4.2025) நீலகிரியில் நடைபெற்ற அரசு விழாவில், 494 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் 1703 முடி வுற்ற பணிகளை திறந்து வைத்து, ரூபாய் 130 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 56 புதிய திட் டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 102 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பி லான அரசு நலத்திட்ட உதவிகளை 15,634 பயனாளிகளுக்கு வழங்கி னார்.

**நீலகிரி மாவட்டத்தில் திறந்து வைக் கப்பட்ட பணிகளின் விவரங்கள்**

மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத் துறை சார்பில் நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் 143.69 கோடி ரூபாய் செலவில் கட் டப்பட்டுள்ள நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை பணியாளர்களுக்காக 200 கோடியே 6 இலட்சம் ரூபாய் செல வில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு கட்ட டங்கள், மருத்துவக் கல்லூரி மருத்து வமனை மற்றும் 6 ஊராட்சிகளின் பயன்பாட்டிற்காக 10 கோடி ரூபாய் செலவில் உபகரணங்கள்;

நீலகிரி மாவட்டத்தில் எமரால்டு அரசு மருத்துவமனையில் 8.60 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட் டுள்ள பொதுமக்கள் காத்திருப்புக் கூடம், அவசரகால ஊர்தி மற்றும் வாகன நிறுத்தும் யிடம் மற்றும் சுற் றுச்சுவர் கட்டடம்; 1.50 கோடி ரூபாய் செலவில் கேத்தி, தங்காடு ஓரநள்ளி மற்றும் நெலாக்கோட்டை ஆகிய மூன்று இடங்களில் வட்டார சுகாதார அலகு; அணிக்கொரை, தாவெணை, நஞ்சநாடு, ஹாப்பிவேலி, அய்யன் கொல்லி, செரச்சால், நெல்லியாளம், கோட்டப்பாடி, தேவாலா, நந்தட்டி, நடு வட்டம், அனுமாபுரம், டி.ஆர். பஜார் மற்றும் ஏலமன்னா ஆகிய பதி னான்கு இடங்களில் 5.33 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய துணை சுகாதார நிலையக் கட்டடங் கள்; உதகமண்டலத்தில் 1.20 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம், என மொத்தம் 370.42 கோடி ரூபாய் செலவிலான மருத்து வத் துறை கட்டடங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள்;

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண் மைத் துறை சார்பில் கோத்தகிரியில்** 5 கோடியே 20 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் அரசு அலு வலர்களுக்கான 16 குடியிருப்புக் கட்டடங்கள், உதகை, குன்னூர் மற் றும் கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் களின் அலுவலகங்களுக்கு 63 இலட் சம் ரூபாய் செலவில் இசேவை மையங்கள், பொதுமக்கள் காத்தி ருப்பு அறைகள் மற்றும் கணினி அறைகளுக்கான கூடுதல் கட்டடங் கள் என மொத்தம் 5 கோடியே 83 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செல வில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள்;



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.4.2025) நீலகிரியில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். உடன், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு உள்ளார்.

**வேலைவாய்ப்பு (ம) பயிற்சித் துறை யின் சார்பில்** கூடலூர், உப்பட்டி தொழிற்பயிற்சி நிலையத்திற்கு 2 கோடியே 3 இலட்சம் ரூபாய் செல வில் விடுதிக் கட்டடம்;

**பள்ளிக்கல்வித் துறையின் கீழ் செயல்படும் பொது நூலகத் துறை சார் பில்** குன்னூர் வட்டாரம் கேத்தி மற் றும் உதகமண்டலம் வட்டாரம் – தும் மனட்டி ஆகிய இடங்களில் 74 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செல வில் கிளை நூலகக் கட்டடங்கள், உத கமண்டலம் வட்டாரம் – கப்பச்சியில் 22 இலட்சம் ரூபாய் செலவில் நூல கக் கட்டடம்;

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர் வோர் பாதுகாப்புத் துறை சார்பில்** கூட லூர் வாழைத்தோட்டம், கோத்தகிரி ஈளாடா, பந்தலூர் கோழிச்சால் ஆகிய இடங்களில்

33 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் 3 புதிய நியாய விலைக் கடைகள், கோத்தகிரி சுள்ளிக்கூடுவில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை, உதகை போர்த்தியாடா மற் றும் குன்னூர் ஆருவ ஒசஹட்டி ஆகிய இடங்களில் புதிய நடமாடும் நியாய விலைக் கடைகள்;

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியி னர் நலத் துறை சார்பில்** உதகை வட் டம், நஞ்சநாடு2 கிராமம், பகல்கோடு மந்துவில் தோடர் பழங்குடியின மக் களுக்காக 50 இலட்சம் ரூபாய் செல வில் பால் சேகரிப்பு கூட்டுறவு சங்கக் கட்டடம், கூட்டுறவு சங்கத்திற்கான வாகனம் மற்றும் தேவையான உப கரணங்கள், உதகை வட்டம், கக் குச்சி கிராமம், திருச்சிக்கடியில் செயல் பட்டு வரும் கம்டோகோவ் கைவினைஞர்கள் மகளிர் சுயஉத விக்குழுவிற்கு 15 இலட்சம் ரூபாய் செலவில் மண்பானை விற்பனை மையக் கட்டடம்;

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில்** சோலூர் பேரூராட்சிக்கு 1 கோடியே 47 இலட் சம் ரூபாய் செலவில் புதிய அலுவல கக் கட்டடம்; உதகமண்டலம் நக ராட்சி, வார்டு எண்.36ல் வேலிவியூ பகுதியில் 50 இலட்சம் ரூபாய் செல வில் தொலைநோக்கி கோபுரம்;

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியி னர் நலத் துறையின் கீழ் செயல்படும் தாட்கோ சார்பில்** உதகமண்டலம் – தக்கர்பாபா நகர் ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளி மற்றும் எல்க்ஹில் ஆதிதிராவிடர் நல ஆரம்ப பள்ளி, ஹூக்கர் ஆதிதிராவிடர் நல உயர்நி லைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் 1 கோடியே 52 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடு தல் வகுப்பறைகள்;

**கால்நடை பராமரிப்புத் துறை சார் பில் கூடலூர் வட்டாரத்திற்கு 16 இலட் சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் வாகனம் மற்றும் மருத்துவ உபகர ணங்கள்**;

**நெடுஞ்சாலைத் துறை சார்பில்** உதகமண்டலம் – தலைகுந்தா கல் லட்டி தெப்பகாடு சாலையில் 1 கோடியே 99 இலட்சம் ரூபாய் செல வில் பாலம் மற்றும் காட்டேரி முதல் சேலாஸ் கெந்தளா பாலாடா கொல் லிமலை வழியாக காந்திபேட்டை வரை 20.500 கி.மீ தூரம் குன்னூர் நகருக்கு 48 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மாற்றுப்பாதை;

**வனத் துறை சார்பில்** கூடலூர் வனக்கோட்டத்தில் மரத்திலான ஓய் வறை, குன்னூர் வனசரகத்திற்குட் பட்ட காட்டேரி சோதனை சாவடி, பைக்காரா வனசரகத்திற்குட்பட்ட பைக்காரா மற்றும் நீலகிரி வனசரகத் திற்குட்பட்ட உதகை தெற்கு ஆகிய இடங்களில் முன்கள பெண் பணியா ளர்களுக்கான ஓய்வறை மற்றும் கழி வறைகள், குந்தா வனசரக அலுவல கத்தில் முன்கள பெண் பணியா ளர்களுக்கு ஓய்வறை மற்றும் கழி வறை, நீலகிரி வனக்கோட்டம், உதகை தெற்கு வனசரக அலுவலர் குடியிருப்புக் கட்டடம், பழங்குடியின குக்கிராமங்களுக்கு சூரியஒளி மின் விளக்குகள், தெருவிளக்குகள், பைக் காரா நீர்வீழ்ச்சி புதிய படகு இல்லத் தில் 3 மிதக்கும் நடைபாதைகள், நுழைவுச்சீட்டு கட்டணம் வசூலிக்கும் அறை, பெண்களுக்கான கழிவறை, மேம்படுத்தப்பட்ட வேட்டை தடுப்பு மற்றும் நடமாடும் முகாம்கள், கட்டி முடிக்கப்பட்ட புதிய முகாம்கள், வன விலங்குகள் உணவுக்கான புற்கள் உற்பத்தி, நாற்று நடுதல், மேம்படுத் தப்பட்ட முன்கள பெண் வன பணியா ளர்களின் அலுவலக உட்கட்டமைப்பு வசதிகள், மேம்படுத்தப்பட்ட முன்கள பணியாளர்களின் குடியிருப்புகளை என மொத்தம் 2 கோடியே 56 இலட் சம் ரூபாய் செலவிலான கட்டடங்கள்;

**ஊரக வளர்ச்சித் துறை சார்பில்** கூடலூர் சேரங்கோடு ஊராட்சி – கொத்தல் குண்டு பகுதியில் 2 கோடியே 75 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் பாலம், கூடலூர் நெலாக்கோட்டை ஊராட்சி – பாலவ யல் பகுதியில் 3 கோடியே 39 இலட் சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் மறுகட்டமைப்பு செய்யப்பட்ட பாலம், குன்னூர் வட்டாரத்தில் ஆடர்லி சேம் புகரை சாலை, கரிமரஹட்டி சாலை, தைமலை அம்பேத்கர் சாலை, கோத் தகிரி வட்டாரத்தில் கோபி ஈரோடு சாலை முதல் தும்பூர் சாலை, மார் வளா முதல் பள்ளியாடா வரை சாலை, மேம்படுத்தப்பட்ட கோடநாடு சுண்டட்டி தார் சாலை, கூடலூர் வட் டாரத்தில் அம்பலாமூலா முதல் வடவ யல் சாலை, உதகமண்டலம் தொட்ட பெட்டா ஊராட்சியில் முத்தோரையில் சமுதாயக்கூடம், கோத்தகிரி வட்டாரம் – கட்டபெட்டு உயர்நிலைப் பள்ளியில் சமையலறை, உதகமண்டலம் வட் டாரம், தூனேரி ஊராட்சி, ஊர்மலை யில் நடைபாதையுடன் கூடிய தடுப்புச் சுவர், முள்ளிகூர் ஊராட்சி நேருநகர் காலனியில் கழிவுநீர் கால்வாயுடன் கூடிய நடைபாதை, இத்தலார் ஊராட்சி – சுரேந்திர நகர் காலனியில் பல்நோக்கு கட்டடம், தூனேரி ஊராட்சி ஊர்மலை கிராமத்தில் விளையாட்டு மைதானத்திற்கு தடுப் புச் சுவர், குன்னூர் வட்டாரத்தில் சின்ன பிக்கட்டி கிராமத்தில் சமுதாய கூடத்திற்கு சமையலறை, ஜயப்பன் காலனியில் சமுதாய கூடத்திற்கு சமையலறை, கூடலூர் வட்டாரத்தில் பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தில் கட் டப்பட்டுள்ள வீடுகளுக்கு சிமெண்ட் சாலைகள், குடிநீர் குழாய், மேல் நிலை நீர்தேக்க தொட்டி, கழிவுநீர் கால்வாய், கலைஞரின் கனவு இல் லம் திட்டத்தில் 8 கோடியே 61 இலட் சம் ரூபாய் செலவில் 246 வீடுகள், பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 70 வீடுகள், பிரதம மந்திரி பெருந் திட்டத்தின் கீழ் 11 கோடியே 80 இலட் சம் ரூபாய் செலவில் 206 வீடுகள், பழங்குடியினருக்கான வீடுகள் கட் டும் திட்டத்தின் கீழ் 2 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் 59 வீடு கள், ஊரக வீடுகள் பழுது பார்க்கும் திட்டத்தின் கீழ் 14 கோடியே 28 இலட் சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் பழுது பார்க்கப்பட்ட 1025 வீடுகள், என மொத்தம் 51 கோடியே 6 இலட் சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள்;

**தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர் கள் துறை சார்பில்** 6 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்ட மண் சுகா தார மேலாண்மைக்கான கருவிகள்;

**ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தில்** கோத்தகிரி வட்டா ரத்தில் ஈளாடா பாரதி நகர், கரிக்கை யூர், தாளமுக்கை ஆகிய இடங்களில் 53 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அங்கன் வாடி கட்டடங்கள்;

**கூட்டுறவு, உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில்** கூடலூர் வட்டாரத்தில் மசினகுடி ஊராட்சியில் 18 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் நியாய விலைக்கடை, கோத்தகிரி வட்டாரத்தில் தெங்குமர ஹடா ஊராட்சி அல்லிமாயாரில் 16 இலட்சம் ரூபாய் செலவில் பொது விநி யோகக்கடை மற்றும் நீலகிரி கூட்டு றவு விற்பனை சங்கத்தின் சுற்றுலா வாகனங்கள் நிறுத்துமிடத்தில் 42 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செல வில் 29 கடைகள்; என மொத்தம் 77 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் செல வில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள்;

**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில்** முது மலை புலிகள் சரணாலயத்தின் வனப்பகுதியில் உள்ள யானைகளை மின் விபத்தில் இருந்து தடுக்கும் பொருட்டு தொரப்பள்ளி முதல் தெப்பக் காடு வரை 11 கி.மீ. தூரத்திற்கு 5 கோடி ரூபாய் செலவில் வான்வழி தொகுப்பு கடத்தி மின்பாதை;

என மொத்தம் 494 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் 1703 முடி வுற்ற பணிகளை தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**நீலகிரி மாவட்டத்தில் அடிக்கல் நாட்டப்பட்ட பணிகளின் விவரங்கள்**

**கால்நடை பராமரிப்புத் துறை சார் பில்** தொலைதூர பழங்குடியின கிரா மங்களில் 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆட்டு கொட்டகை கள் அமைக்கும் பணிகள்;



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.4.2025) நீலகிரியில் நடைபெற்ற அரசு விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்களை வழங்கி,அவர்களுடன் உரையாடினார்.

**பொதுப்பணித் துறை சார்பில்** கோத்தகிரி அரசு மருத்துவமனை யில் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம், தேவர் சோலையில் 69 இலட்சத்து 50 ஆயி ரம் ரூபாய் மதிப்பீட்டில் நெம்பலா கோட்டை வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு கட்டடம், சோலூர் கோத்தகிரி அரசு உயர்நிலைப் பள்ளியில் 1 கோடியே 59 இலட்சத்து 99 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 6 வகுப்பறைக் கட்டடங் கள்;

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில்** தேவர் சோலை முக்கூர் முதல் ஒற்று வயல் தார்சாலையை 31 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள், கம்பாடி முதல் சக்கச் சிவயல் வரை தார்சாலையை 59 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்ப டுத்தும் பணிகள்; பண்ணிக்கொல்லி மற்றும் செத்தன்கொல்லி ஆகிய இடங்களில் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அங்கன்வாடி கட்டடங்கள்;

பால் வளத்துறை சார்பில் உதக மண்டலம் புதிய பால் பண்ணை வளாகத்தில் 13 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பதப்படுத்தப்பட்ட பாலாடைக்கட்டி தயாரிக்கும் தொழிற் சாலை அமைக்கும் பணிகள்;

**ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத் துறையின் கீழ் செயல்படும் தாட்கோ சார்பில்**, கோத்தகிரி குஞ்சப் பனை ஊராட்சி ஜக்கனாரை கிராமத் தில் 77 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கிராம பயிற்சி மையக் கட்டடம், கூடலூர் கார்குடி பழங்குடியி னர் நல உண்டு உறைவிட மேல்நி லைப் பள்ளிக்கு 3 கோடியே 26 இலட் சம் ரூபாய் மதிப்பீட்டில் 4 வகுப்பறை கள் மற்றும் 3 அறிவியல் ஆய்வுக் கூடங்கள், கூடலூர் வாழவயல் கிரா மத்தில் பழங்குடியினர் வசிக்கும் பகு திக்கு 9 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் 9 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகள், கூடலூர் ஏரோடு கிராமத்தில் பழங்குடியினர் வசிக்கும் 16 குடும்பங்களுக்கு (பகுதி 1, 2 மற்றும் 3) 26 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் உட்கட்ட மைப்பு வசதிகள் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கும் பணிகள், கூடலூர் முண்டக்குன்னு கிராமத்தில் வசிக்கும் 11 பழங்குடியி னர் குடும்பங்களுக்கு 24 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் உட் கட்டமைப்பு வசதிகள் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கும் பணிகள், கோத்தகிரி புது கோத்தகிரி கிராமத்தில் வசிக்கும் 16 பழங்குடியினர் குடும்பங்களுக்கு 24 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப் பீட்டில் உட்கட்டமைப்பு வசதிகள் மற் றும் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கும் பணிகள்;

**நெடுஞ்சாலைத் துறை சார்பில்** உதகை நகருக்கு 10.85 கி.மீ தூரத் திற்கு 81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாற்றுப் பாதை அமைக்கும் பணிகள்;

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி கள் துறை சார்பில்** கூக்கல் தொரை மற்றும் தூனேரி ஆகிய இடங்களில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப் பீட்டில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள், தொட்டப் பெட்டா ஊராட்சி ஆடாசோலை, நெடு குளா ஊராட்சி வ.உ.சி. நகர், கெங் கரை, ஜக்கனாரை ஊராட்சி, ஹாடாத்தொரை பகுதி, கொணவக் கரை ஆகிய இடங்களில் 2 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் துணை சுகாதார மையங்கள், கட நாடு ஊராட்சி தாவணெ மல்லிக் கொரை சாலையில் 3 கோடியே 7 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பாலம் கட்டும் பணிகள்,

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்